| | |
|---|---|
| **2.** | முன்னுரை |
| 2.1 | கிழக்கு மலைத்தொடர் அமைப்பு |
| 2.2 | கிழக்கு மலைத்தொடர் குன்றுகள் |
| 2.3 | சவ்வாது மலையின் அமைவிடம் |
| 2.3.1. | சவ்வாதுமலைப் பெயர்காரணம் |
| 2.3.2. | சவ்வாதுமலையின் பண்டைய வரலாறு |
| 2.3.3. | தட்பவெப்ப நிலை |
| 2.3.4. | மலையின் உட்பிரிவுகள் |
| 2.3.5. | நீர்வளம் |
| 2.3.6. | மண்வளம் |
| 2.3.7. | சவ்வாதுமலையில் காணப்படும் தாவர இனங்கள் |
| 2.3.8. | மூங்கில் வகைகள் |
| 2.3.9. | பயிறு வகைகள் |
| 2.3.10. | மலையில் வாழும் விலங்கினங்கள் |
| 2.3.10.1. | வீட்டு விலங்குகள் |
| 2.3.10.2. | காட்டு விலங்குகள் |
| 2.3.11. | சவ்வாது மலையின் சிறப்புகள் |
| 2.3.11.1. | கல்வெட்டுக்கள் |
| 2.3.11.2. | புதிய கற்காலக் கருவிகள் |
| 2.3.11.3. | குள்ளர் குகைகள் |
| 2.3.11.4. | யானைக் கட்டிக்கல் |
| 2.3.11.5. | நீர்மத்தி மரமும் கண்ணாடி மாளிகையும் |
| 2.3.11.6. | பீமன் நீர்வீழ்ச்சி |
| 2.3.11.7. | திப்பு சுல்தான் கோட்டை |
| 2.3.11.8. | இயற்பியல் மையம் |
| 2.3.12. | சுற்றுலாத் தளம் |
| 2.3.13. | போக்குவரத்து |
| 2.3.14. | மலையில் வாழும் பிற இனமக்கள் |
| 2.3.15. | இருளர்களின் தொழில்கள் |
| 2.3.16. | பிற நிறுவனங்கள் |
| 2.4.0. | தொகுப்புரை |

## 2. முன்னுரை

உலகில் பல்வேறு வகையான உயிரினங்கள் வாழ்ந்து வந்தாலும் ஒவ்வொரு உயிரினமும் இடச் சூழலுக்கும் காலச் சூழலுக்கும் ஏற்ப தன் வாழ்வினை அமைத்துக் கொள்கின்றது. மனிதனும் அதற்கு விதிவிலக்கில்லை. அவன் தேர்ந்தெடுக்கும் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப அவனுடைய பண்பாடும் அமைகிறது என்பது சமூகவியலறிஞர்கள் கருத்தாகும். எனவே, புவியியற் சூழல் மனிதப் பண்பாட்டமைப்புக்கு இன்றியாமையாதது ஆகும். சங்ககால மக்களின் ஐவகை நில அமைப்பும் இதனை விளக்குவதாக உள்ளது.

“உலகின் உயிர்வாழ் பகுதி முழுமையையும் அதிகமான எண்ணிக்கையில் நிரப்பியுள்ள ஒரே உயிரினம் மனிதர் இனம் ஆகும். மற்ற பிராணிகளுடன், வாழ்வின் அடிப்படை அவசியங்களுக்கான போட்டியில் மனிதர்களே, வெற்றி பெறுகின்றனர். இயற்கையின் சக்திகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததால், தடையின்றி நாளும் பெருகிவரும் மனிதர்கள் தங்களின் தேவைகளுக்காக இயற்கையை சுறையாடிக் கொண்டிருக்கின்றனர்”[1].

இந்தச் சூழ்நிலையில் இயற்கைக்கு ஏற்பத் தங்களுடைய வாழ்க்கை முறையினை அமைத்து, இயற்கையின் செழுமையையும் காத்து, இன்றளவும் இயற்கையின் பாதுகாவலர்களாக பழங்குடியினர் இருக்கின்றனர். இப்பழங்குடி மக்களின் கலாச்சாரம், பண்பாடுகளை ஆராய்ந்து அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வது இன்றைய மனிதர்களுக்கு மிகவும் அவசியமாகிறது. அந்த வகையில் காடுகளையும் மலைகளையும் வாழிடங்களாகக் கொண்டு, இயற்கையின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் சவ்வாதுமலை மலையாளி இனப் பழங்குடி மக்களின் இருப்பிடச் சூழல் பற்றி ஆராய்வதாக இந்த இயல் அமைகின்றது.

### 2.1. கிழக்கு மலைத்தொடர் அமைப்பு

இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை ஒட்டி ஒரே தொடச்சியாக இல்லாமல் பகுதிப் பகுதியாக அமைந்துள்ள மலைத்தொடர் கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடர் என்று அழைக்கப்படுகிறது. இந்த மலைத்தொடர் வடக்கில் மேற்கு வங்காளத்தில் தொடங்கி ஒடிசா மற்றும் ஆந்திரா வழியாகத் தமிழ்நாடு சிறு பகுதி கர்நாடகம் வரை பரவியுள்ளது. இந்த மலைத்தொடர்கள்களின் தொடர்ச்சி துண்டிக்கப்பட்டதற்கான காரணம், தீபகற்ப இந்தியாவின் நான்கு முக்கிய ஆறுகளான **‘கோதாவரி’, ‘மகாநதி’, ‘கிருஷ்ணா’, ‘காவேரி’** ஆகிய ஆறுகள் இம்மலைத் தொடரின் ஊடாகப் பாய்ந்து ஏற்படுத்திய மண்ணரிப்பு ஆகும். இந்த மலைத்தொடர் வங்காள விரிகுடாவிற்கு இணையாக நீண்டிருக்கிறது. கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இடையில் தக்காணப் பீடபூமி அமைந்துள்ளது.

கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவுக்கும் இடையில் கடற்கரைச் சமவெளி காணப்படுகிறது இந்தத் தொடர் மேற்குத் தொடர்ச்சி மலையைப் போன்று அவ்வளவு உயரமானதாகக் காணப்படவில்லை.

## 2.2. கிழக்கு மலைத்தொடர் குன்றுகள்

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் காட்டிலும் பழமை வாய்ந்தவையாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ளது போலவே கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடரிலும் தொடர்புகளற்ற பல்வேறு மலைக் குன்றுகள் வெவ்வேறு பெயர்களுடன் காணப்படுகின்றன. இவற்றில் உயரமான சிகரம் 1890 மீட்டர் உயரம் கொண்ட 'ஜிகர்தண்டா' மலைக்குன்றாகும். இ∴து ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ளது. ஆந்திராவிலுள்ள நல்லமலை, ஆனந்தகிரி ஆகியவை இந்த மலைத்தொடரைச் சார்ந்தவை ஆகும். தமிழகத்தின் கொல்லிமலை, பச்சைமலை, கல்வராயன்மலை, சேர்வராயன்மலை, சவ்வாதுமலை போன்றவையும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளது. இம் மலைத்தொடர் நீலகிரி பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடருடன் இணைகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக அமைந்துள்ள சவ்வாதுமலை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகவும் இயற்கை வளம் மிக்கதாகவும் காணப்படுகின்றன.

## 2.3. சவ்வாது மலையின் அமைவிடம்

சவ்வாதுமலை இன்றைய வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், செங்கம், போளூர் ஆகிய ஐந்து வட்டங்களில் 262 ச.கி.மீ பரப்பில் அமைந்துள்ளன. இது திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் பரமனந்தலில் தொடங்கி வேலூர் மாவட்டம் அமிர்தியிலும் தருமபுரி மாவட்டம் சிங்காரப்பேட்டையில் தொடங்கி வேலூர் மாவட்டம் ஆண்டியப்பனுரிலும் முடிவடைகின்றன. இம்மலை வடக்கிலிருந்து தெற்காகச் செல்லும் குன்றுகளின் தொகுப்பாக காணப்படுகிறன. மலையின் அதிக பட்ச நீளம் 84 கி.மீ. ஆகவும் அகலம் 62 கி.மீ. ஆகவும் இருக்கிறன. செங்குத்தாகவும், பாறைகள் நிறைந்தும் அமைந்துள்ள இம்மலை இயற்கையெழில் மிக்கதாகவும் பசுமையாகாவும் காட்சி தருகின்றன. இதன் மையப் பகுதியிலும், தென் பகுதியிலும் பல பீடபூமிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

கடல் மட்டத்தில் இருந்து சராசரியாக இதன் உயரம் 1060 மீட்டரில் இருந்து 1160 மீட்டர் வரை ஆகும். திருப்பத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள செம்பறை மலைக் குன்று 1770 மீட்டர் (3559 அடி) உயரத்தில் அமைந்துள்ளன. இது கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரமுள்ள மலைக் குன்றாகும். கிழக்கே போளூர், வடக்கே அமிர்தி, மேற்கே ஆலங்காயம் ஒன்றியங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளன. இதன் பரப்பளவு 3,06,000 ஹெக்டர் ஆகும். இதில் 2,75,300 ஹெக்டர் பரப்பளவு காட்டுப் பகுதியாக

ஒதுக்கப்பட்டுள்ளது. மீதி இருக்கும் 3,07,00 ஹெக்டர் பரப்பளவு மட்டுமே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு பல்வேறு வகையான தாவர இனங்களும், விலங்குகளும் வாழ்ந்து வருகின்றன.

### 2.3.1. சவ்வாதுமலை பெயர்க்காரணம்

சவ்வாது என்பது ‘‘ஒரு வகைப் பூனையின் மணப் பொருள்’’[2] என்றும் ‘‘பூனையின் வாசனை திரவியம்’’[3], என்றும் ‘‘ஒரு வாசனைப் பண்டம்’’[4] என்றும் தமிழ் அகராதிகள் பொருள் தருகின்றன. மேலும், ‘‘சவ்வாது பிள்ளை என்பது சவ்வாது பூனை’’[5] என்றும் பொருள் கூறுகின்றது

‘‘புனுகு என்பது மிகப் பழமையான வாசனைத் திரவியம் ஆகும். இது ‘புனுகுப்பூனை என்கிற விலங்குகளிலிருந்து பெறப்படுகிறது. இது ‘கீட்டோன்’ வகையைச் சேர்ந்தது. இவை செறிவான கஸ்தூரி வாசனையைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. காரணம் புனுகும் கஸ்தூரியும் ஒரே வாசனைக் கூறாகிய **‘மக்ரோ சைடிக் கேட்பென’** (Macrocyetic Ketone) வகையைச் சேர்ந்தது’’[6].

“புனுகு என்பதற்கு, கஸ்தூரி, கத்துரி, சவ்வாது, சந்தனம், மான்மதம், புனுகுப்பூனை” என்று பல பொருள் தருகின்றது ‘Madras lexican’. “பூனைகளில் பல வகை உண்டு, அவற்றில் புனுகு என்றொரு வகைப் பூனையின் ‘விந்தே’ ‘புனுகு’ என்ற பெயரில் பயன்படுத்தப்படுகிறது. சவ்வாது என்பதும் இவ்வகைப் பூனையின் விந்தே ஆகும். இது ‘கொழ கொழப்பாய்’ இருக்கும்”[7]. புனுகு சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. இக்கூற்றுகளை நோக்கும் போது ‘புனுகுப்பூனை’ என்கிற விலங்கு சவ்வாதுமலையில் மிகுதியாக இருந்திருக்க வேண்டும். இந்தப் பூனையில் இருந்து தயாரிக்கப்படும் வாசனைத் திரவியத்திற்கு ‘சவ்வாது’ என்று பெயர் இருந்துள்ளது. மேலும், மலையின் தட்பவெட்ப நிலையும் சந்தன மரங்கள் செழித்து வளர்வதுக்கு ஏதுவாகவும் அமைந்துள்ளது. சந்தன மரத்திலிருந்து உருவாக்கப்படும் ஒரு பண்டத்திற்குச் ‘சவ்வாது பவுடர்’ என்று பெயர் வந்துள்ளது. மேற்கண்ட கூற்றுகளை இரு கூற்றுகளையும் நோக்கும் போது சவ்வாதுமலையில் இருக்கும் பூனையிலிருந்து தயாரிக்கப்படும் வாசனைத் திரவியத்திற்கும், சந்தன மரங்கிளிலிருந்து எடுக்கப்படும் நறுமணப் பொருளுக்கும் ‘சவ்வாது’ என்ற ஒரே பெயா் இருப்பதைக் காணமுடிகிறது. முடிவில் இம்மலைப் பகுதியில் ‘சவ்வாது’ என்கிற வாசைனத் திரவியம் மிகுதியாக விளைந்ததால், இதன் பெயரிலேயே இந்த மலைக்கும் ‘சவ்வாதுமலை’ என்று பெயர் வந்திருக்க வேண்டும் என்ற முடிவு கிடைக்கிறது.

மேலும், “இம்மலை பகுதியில் சந்தனம் மரங்கள் அதிகமாக விளைந்ததால் இவற்றிற்கு ‘சவ்வாதுமலை’ என்று பெயர் வந்ததாக”[8] தகவலாளி கேசவன் (ஊ.த) கூறுகின்றார். “அதிகமான நறுமணப் பொருட்கள் விளைந்ததால் இதற்குச் ‘சவ்வாதுமலை’ என்று பெயர் வந்து இருக்கலாம்”[9] என்று சம்மந்தர் குறிப்பிடுகிறார். இக்கருத்துக்களும் முன்பு பெறப்பட்ட முடிவுக்கு வலுசேர்க்கிறது.

### 2.3.2. சவ்வாதுமலையின் பண்டைய வரலாறு

நாகரிக மக்கள் எப்படி பழங்குடிகளாகவும், ஆதிவாசிகளாகவும் மலைவாசிகளாகவும் ஆனார்கள் என்பது பற்றி கூறும்போது மானிடவியல் அறிஞர் பிலோ இருதயநாத் அவர்கள், “பழங்குடிகள் ஒரு அரசன் வேறு அரசனின் ஊர்களைப் பிடித்துக் கொண்டதும் தங்களுடைய ஊர்களை விட்டு விட்டு, அன்னிய அரசனுக்கு பயந்து நாடோடிப் பிச்சைக் காரர்களாகவும், சிலர் மலைவாசிகளாகவும், ஆதிவாசிகளாகவும், ஆடிமாதப் பிச்சைக் காரர்களாகவும் பூமாடுகளைப் பழக்கிக் கொண்டும், பலர் தெருவித்தைகள் ஆடுபவர்களாகவும் ஆனார்கள்”[10] என்று கூறுகின்றார். இதனை வரலாற்று அறிஞர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சவ்வாதுமலை மக்கள் வரலாற்றை ஆராய்கையில் பலநூற்றாண்டுகளுக்கு முன்பு இம்மக்களின் முன்னோர்கள் அரசர்களாகவும், அரச இனத்தவர்களாகவும், அரசனின் போர்வீரர்களாகவும், எல்லைக் காவல்காரர்களாகவும் இருந்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் மலை சேர, சோழ, பாண்டியர்களின் வரலாற்றில் அவர்களின் அரசுக்கு உட்பட்டிருந்துள்ளன. பின்னர் பல்லவர் அட்சியின் கீழும், அடுத்து விஜயநகர மன்னர்களிடமும், நாயக்கர்களிடமும், முகமதியர்களிடமும் இறுதியாக ஆங்கிலேயர் ஆட்சியின் கீழும் இருந்துள்ளதாக அறியமுடிகிறன.

பத்தாம் நூற்றாண்டு முதல் சில வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. மேலும் விரிவாக ஆராய்ந்தால் தெளிவான வரலாற்றை அறிய முடியும். கடைச்சங்க காலத்து அரசர்களுக்கு மலைகள் சிறந்த இருப்பிடங்களாக இருந்திருக்கின்றன. ‘நவிரமலை’ சங்க கால இலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ள மலைகளில் ஒன்று. இது வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களை உள்ளடக்கியப் பகுதி ஆகும். இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் “பல்குன்றக் கோட்டம்” என்று அழைக்கப்பட்டது. பல்குன்றக் கோட்டத்தை ஆட்சி செய்தவன் செங்கண் மாத்துவேள் ‘நன்னன் சேய் நன்னன்’ என்னும் அரசனாவான். இவனது மலையாகவே நவிர மலையை, ‘இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசினார்’ என்ற புலவர் ‘மலைபடுகடாம்’ என்ற இலக்கியத்தில் பாடியிருக்கின்றார். இந்நூல்

வள்ளலாகிய நன்னனிடம் பரிசு பெற்றுத் திரும்பும் கூத்தன் ஒருவன் வழியில் கண்ட தன்னையொத்த வறுமை நிலையில் இருந்த கூத்தனுக்கு நன்னன் நாட்டு இயல்பையும், மலை வளத்தையும், நன்னனின் கொடை வளத்தையும் சொல்வதாக அமைந்துள்ளது. இதில் நவிரமலை பற்றிய குறிப்புகள் பின்வருமாறு அமைகின்றது.

“நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேரிசை நவிர மேஎ யுறையும்
காரி உண்டிக் கடவுள தியற்கையும்” (ம.ப.க. 81-84) எனவும்,
‘‘கழைவளர் நவிரத்து மீமிசை நெரேரென’’ (ம.ப.க. 579)

என்று நவிரமலையைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. இந்த நவிரமலை எனக் குறிப்பிடப்பட்ட நன்னனின் மலை இன்று **‘பர்வதமலை’** என்றும் **‘திரிசூலகிரி’** (கிரி-மலை) என்றும் ‘தென்கயிலாயம்’ என்றும் அழைக்கப்படுகிறது. இம்மலையின் உச்சியில் உள்ள பெரிய சமதளப் பாறையின் மீது ஆழகிய கோயில் ஒன்று அமைந்துள்ளது. இந்தக் கோயில் நன்னன் என்ற மன்னன் காலத்தில், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டது என்று அனைவராலும் கூறப்படுகிறது. இங்கு எழுந்தருளியுள்ள சிவனுக்கு “காரியுண்டிக் கடவுள்” என்ற பெயரும் உண்டு. ‘கரிய நிறமுடைய விஷத்தை’ உண்டதால் இப்பெயர் வழங்கப்படுகிறது. இதுவே தற்போது மருவி ‘ஸ்ரீகாளகண்டீஸ்வரர்’ என்றும், ஸ்ரீகரைகண்டீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்றது.

நவிரமலையின் தலைவனான நன்னன் என்பவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட இந்நூல், நவிரமலை மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் தலைவனின் கொடைத் திறத்தையும் புகழ்ந்து பாடுகிறன. சங்க காலத்தில் பல்குன்றுக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்ற ஒரு குறு நில மன்னன் ‘செங்கண்மா’ என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். இவனால் இப்பகுதி (செங்கம் வட்டம்) ஆளப்பட்டது என்றும், அவன் நாடு நன்னன் நாடு என்றும் கூறப்படுகிது. இந்நாட்டில்தான் சவ்வாதுமலை அமைந்துள்ளது. மலைபடுகடாம், பெரும்பாணாற்றுப்படை ஆகிய சங்க இலக்கிய நூல்களில் நன்னனையும் நன்னன் நாட்டைப் பற்றியும் (செங்கம்) கூறப்பட்டுள்ளன. இந்த மன்னனால் கட்டப்பட்ட பருவதவர்த்தினி, சிவன் கோயில் பருவதமலைச் சிகரத்தில் இருக்கிறது. இக்கோவிலில் இருக்கும் இறைவனுக்கு மார்கழி மாதங்களில் விழா எடுக்கின்றனர். இந்தச் சிகரத்தில் ஏறுவது மிகவும் கடினம். ஆவ்வாறு சிகரத்தில் ஏறும் போது ஏணிப்படி, அந்தரங்கப்படி, ஆகாயப்படி என்று மலையில் ஏறும் இடங்களைக் குறிப்பிடுகின்றனர்.

செங்கண்மா என்ற நகரம் தற்போது மறுவி ‘செங்கம்’ என்று அழைக்கப்படுகிறது. இது திருவண்ணாமலைக்கு மேற்கே சுமார் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நன்னன் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை பர்வத மலையின் மேல் ‘சிங்கக் கிணறு’ என்ற இடத்திலும்; சவ்வாதுமலையின் மேல் அமைந்துள்ள துர்வம் குன்றின் மேலும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. இந்தக் கோட்டை மலையின் உச்சியில் உள்ளதால் பகைவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இவை அன்றைய ஆட்சியாளர்களால் பயன்படுத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. மேலும், இந்தக் கோட்டைகள் மராட்டியர்களின் ஆட்சியின் போது, ஆயுதக் கிடங்குகளாகவும், மருந்துக் கிடங்குகளாகவும் பயன்படுத்தப்பட்டது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### 2.3.3. தட்பவெப்ப நிலை

கிழக்கு மலைத் தொடர்களிலேயே சவ்வாது மலை தனித்துவம் மிக்கது. கோடைக் காலங்களில் இதன் அதிக அளவு வெப்பம் மற்ற இடங்களை விடக் குறைவாகவும் குளிர் காலத்தில் அதிகமாகவும் இருக்கிறது. அதிக வெப்பமாகவும், குளிராகவும் இருப்பதில்லை. மேற்குத் தொடர்ச்சி மலைகள் பெரும்பகுதி தென்மேற்குப் பருவமழையைச் சார்ந்தே இருக்கின்றன. ஆனால், கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான சவ்வாதுமலை தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையைச் சார்ந்து இருக்கின்றன.

சவ்வாதுமலையில் கோடைக் காலத்தில் அதிக அளவு “வெப்பம் 36.6$^{oc}$ டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த அளவு வெப்பம் 20,7$^{oc}$ ஆகவும் இருக்கிறது. குளிர் காலத்தில் அதிக அளவு வெப்பம் 27.3$^{oc}$ ஆகவும், குறைந்த அளவு வெப்பம் 16.7$^{oc}$ ஆகவும் இருக்கிறது. இங்கு ஆண்டிற்கு சராசரியாக 1000.85. மி.மீ மழைப் பெய்கிறது. இம்மலையின் பெரும்பகுதி தென்மேற்கு (480.மி.மீ) மற்றும் வடகிழக்குப் (429.மி.மீ) பருவமழையின் மூலமாகக் கிடைக்கிறது”[11]. சவ்வாது மலையின் பருவக் காலங்களை நான்காகக் குறிப்பிடலாம்.

- வறட்சியான பருவம் - டிசம்பர் முதல் மார்ச்சு வரை மழை பெய்வது மிக அரிது.
- வெது வெதுப்பான பருவம் - ஏப்ரல் முதல் ஜீன் வரை அடிக்கடி மழைப் பெய்யும்.
- தென்மேற்குப் பருவமழைப் பருவம் - ஜீன் முதல் செப்டம்பர் வரை நல்ல மழைப் பெய்யும்.

➢ வடகிழக்குப் பருவமழைப் பருவம் - அக்டோபர் முதல் நவம்பர் வரை தொடர்ந்து மலைப் பெய்யும்.

இங்குப் பெய்யும் மழையின் பெரும்பகுதி ஏறக்குறைய பாதி அளவு மழை இறுதியாக உள்ள இரண்டு மாதங்களிலேயே பெய்து விடுகிறது.

### 2.3.4. மலையின் உட்பிரிவுகள்

இயற்கையின் நறுமணமான சவ்வாதுமலையை **'வடமலை'**, **'தென்மலை'**, **'மேல்மலை'** மற்றும் **'காணமலை'** என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது செங்கம் கணவாய்க்கு வடக்கில் இருக்கும் மலையை **'வடமலை'** என்றும், தெற்குப் பகுதியில் இருப்பதை **'தென்மலை'** என்றும், மேற்குப் பகுதியில் இருப்பதை **'மேல்மலை'** என்றும் கிழக்குப் பகுதியில் இருப்பதை **'காணமலை'** என்றும் குறிப்பிடலாம்.

தென்மலையில் 'தேன் கூடுகள்' மிகுதியாக இருப்பதால் **'தேன்மலை'** என்று இருந்து பிற்காலத்தில் பேச்சு வழக்கில் 'தென்மலை' என்று பெயர் வந்திருக்கவும் இடமுண்டு. அதேபோல் 'காணமலை' என்பதும் பலவகையான ஒலிகள், பாடல்கள் ஒலித்ததால் இப்பெயர் வந்ததாகவும் தகவலாளிகள் கூறுகின்றனர். இவை தவிர்த்து சிறுசிறு குன்றுகளும் இம்மலைப் பகுதிகளில் காணப்படுகின்றன.

- ❖ கழுகுமலை - கழுகு போன்று வடிவம் உள்ளதால்
- ❖ சாமி மலை - சாமி இருப்பதால்
- ❖ துர்வம் மலை - மலைப் பகுதிகளுக்கு அரணாக இருப்பதால்
- ❖ உயர்லஸ் மலை - உயர்லஸ் டவர் உள்ளதால்
- ❖ பாண்டவர்கள் மலை - பாண்டவர்கள் வாழ்ந்த குகை வீடுகள் இருப்பதால்.
- ❖ ஒட்டுக்கல் மலை - மலை உச்சியில் பாறைகள் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்ட நிலையில் இருப்பதால்
- ❖ தேன்கல் மலை - மலை உச்சியின் மேலுள்ள பாறை வெடிப்புகளில் தேன்கூடுகள் அதிகமாக இருப்பதால் இப்பெயர் பெற்றது.

மேலும், இம்மலைப் பகுதிகளில் அடர்ந்த காடுகளும், வானுயர்ந்த மரங்களும், செடி கொடிகளும் காணப்படுகின்றன. இம்மலைப்பகுதிகளில் காணப்படும் தாவர இனங்கள் பிற இடங்களில் காணப்படும் தாவர இனங்களைக் காட்டிலும் வேற்றுமை நிறைந்ததும், சக்தி

வாய்ந்ததும் பொருளாதார முக்கியத்துவம் பெற்றதாகவும் இருக்கின்றன. இந்த மலைப்பகுதியில் காலநிலை சாதகமாக அமைவதால் இவ்விடங்களில் மரங்களும் புதர்ச்செடிகளும் நன்றாக வளர்ச்சியடைகின்றன.

சூன் முதல் செப்டம்பர் வரையில் தென்மேற்கு பருவமழையும் அதனைத் தொடர்ந்து வடகிழக்குப் பருவமழையும் பொழிவதால் மலைகள் முழுவதும் தாவர இனங்கள் நிறைந்து பசுமையாகக் காட்சியளிக்கின்றன. இக்காலங்களில் பகல் பொழுதில் கூட மனிதர்களால் உள்ளே புகமுடியாத அளவிற்குக் காடுகள் இருண்டும் அடர்த்தியாகவும் காணப்படுகின்றன. செடிக்கொடிகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டும், தாவர இனங்களும், விலங்குகளும், பறவைகளும் காண்பவர்களுக்குச் செழுமையாகக் காட்சியளிக்கின்றன. சனவரி மாதத்தில் மழை நின்று விடுவதால் தாவரங்கள் அதன் செழுமையை இழக்க நேர்கிறது. கோடைக் காலங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பெரும்பாலான தாவரங்களின் இழைகள் உதிர்ந்து வறட்சியாகவே இருக்கின்றது. இக்காலங்களில் ஆடு, மாடுகள், காட்டு விலங்குகள் போன்றவற்றிற்கு மேய்ச்சல் தட்டுப்பாடும் ஏற்படுகிறது.

### 2.3.5. நீர்வளம்

மலையில் இருக்கும் பெரும் காட்டாறுகளும் சிறுசிறு ஓடைகளும் இயற்கை தந்த கொடைகள் ஆகும். இவற்றின் கரையோரங்களில் மலையாளிகளின் ஊர்களும், குடியிருப்புகளும் அமைந்துள்ளன. கோடைக் காலத்தில் பெரும்பாலான ஓடைகள் வறண்டு போகின்றன. சில ஓடைகளில் மட்டும் ஊற்று நீர் வருகின்றது. மலையாளிகள் இந்த ஊற்று நீரையே குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

மலையிலிருந்து நாமக்கல் ஆறு, கல்லாறு, கூட்டாறு, பாம்பாறு, காட்டாறு, பாலாறு போன்ற சிற்றாறுகளும் செய்யாறு, ஆரணியாறு போன்ற பேறாறுகளும், கமண்டல நதி, மிருகண்டா நதி போன்ற நதிகளும் உற்பத்தியாகின்றன. மலையின் அடிவாரத்தில் செண்பகாத் தோப்பு அணையும், செங்கம் கணவாய்க்கு அருகே கும்பணந்தம் அணையும் கட்டப்பட்டுள்ளதால் அவைகள் அங்குள்ள மக்களுக்கு நீர்வளங்களை வழங்கி வருகின்றன. மலையின் மேல் **‘கோமுட்டேரி’** என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள **‘கோலப்பன்’** ஏரியும், **‘பீமன் நீர்வீழ்ச்சியும்’** இம்மலைக்கு இயற்கை தந்த கொடைகளாகும். சவ்வாது மலையில் உற்பத்தியாகும் ‘செய்யாறு’ சங்ககாலம் முதற்கொண்டே சிறப்புற்று இருந்துள்ளது. இதனை,

> ‘‘காரியுண்டி, செய்யாறு, நவிரமலை
> மலைக்க வைத்த மலைபடுகடாம்’’

என்ற சங்க பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. மேலும், செய்யாற்றின் செழுமையையும் அதன் வழங்களையும் அங்கு வாழ்ந்த மக்களின் இயல்பையும் மலைபடுகடாம் நூல் எடுத்துக் கூறுகிறது.

### 2.3.6. மண்வளம்

சவ்வாதுமலைப் பகுதிகளில் இருக்கும் மண், தென் இந்தியாவில் பொதுவாகக் காணப்படும் செம்மண் வகையைச் சேர்ந்ததாகும். விவசாயத்திற்கும் வேளாண் ஊடு பயிரிடுவதற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளது. “பாறைகள் உடைந்து நொறுங்குவதால் உருவானதே இம்மண். இந்தப் பகுதியில் இருக்கும் பாறைகள் ‘கார்னோனிகட்’ (charnockite) இனத்தைச் சேர்ந்தவை. இதில் ‘மைகா’ (mica) ‘கனிமம்’ (feldspar) மற்றும் சுண்ணாம்புக் கற்கள் போன்றவை கலந்துள்ளன. மண் அமைப்பை உற்று நோக்குங்கால், மேல் மண் சற்றுக் கருப்பாகவும் உயிரினப் பொருள்கள் கலந்த மண்ணாகவும் காணப்படுகிறது. இதன் கணம் சில மில்லி மீட்டரிலிருந்து ‘90’ செ.மீ. வரை இருக்கிறது. இதற்கு அடுத்து ஒரு மீட்டர் அளவிற்கு மஞ்சள் மற்றும் செம்மண் கலந்து இருக்கிறது. அதற்கு அடுத்த நிலையில் இருப்பது இம்மண்ணின் தாய்ப்பாறை. இப்பாறையும் பல இடங்களில் வெளியே தெரியும்படி காட்சி தருகின்றது. சில தாழ்வானப் பகுதிகளில் ‘புல்கரி’ கலந்த கருப்பு மண் கலந்தும் காணப்படுகிறது”[12]. இது தோற்றத்திற்கு மாறாக மிகவும் சத்து குறைந்த மண்ணாகக் இருப்பதை கள ஆய்வின் போது காணமுடிந்தது.

### 2.3.7. சவ்வாதுமலையில் காணப்படும் தாவர இனங்கள்

சவ்வாதுமலைப் பகுதியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரவகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ‘சந்தனம்’, ‘தேக்கு’, ‘வேங்கை’ மரங்கள் அனைத்து மரங்களிலும் முதன்மையானதாகத் திகழ்கின்றன. அதே போன்று ‘பான்தேக்கு‘, ‘வெண் தேக்கு’, ‘ஈட்டிமரம்’, ‘கடுகாய்மரம்’, ‘பலாமரம்’, ‘நெகினிமரம்’, ‘செம்புலிச்சான்மரம்’, ‘புங்கைமரம்’, ‘காசாமரம்’, ‘ஜாலேரி’ போன்ற மரங்கள் விலை உயர்ந்த மரங்களாக இருக்கின்றன. அறிஞர்கள் இவற்றின் ஆயுட் காலம் நூறு ஆண்டுகளாக இருக்கும் என்கின்றனா். இந்த மரங்களில் இருந்து வீடுகளை அழகு செய்யக்கூடிய ‘கட்டில்’, ‘அலைமாரி’, ‘மேசை’ ‘கதவு’ போன்ற அலங்காரப் பொருட்களையும் இவா்கள் செய்துகொள்கின்றனர்.

சந்தன மரங்கள் வெளி நாடுகளுக்கு ஒரு வகையான வாசனைப் பண்டங்களைச் செய்ய அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் ஒரு கிலோ மதிப்பு ரூ.4000 முதல் ரூ.6000 வரை ஆகும். சீனா, தைவான் போன்ற நாடுகள் தமிழ் நாட்டிலிருந்து வைரம்

கொண்ட மரங்களை இறக்குமதி செய்து, ‘இசைக் கருவிகள்’, ‘துப்பாக்கி’ ‘அலங்காரப் ஒப்பனைப் பொருட்கள்’ உள்ளிட்டவை தயாரிக்கப் பயன்படுத்துவதாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. இந்த வகையான மரங்கள் மருத்துவகுணம் நிறைந்ததாகவும், குளிர்ச்சி தரக்கூடியதாகவும் இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

மலையாளிகள் ‘பலா’ மரத்திலிருந்து பலகைகள் அறுத்தெடுத்து கதவு, பரண், மாடம், போன்றவற்றை அமைத்துக் கொள்கின்றனர். மேலும், காட்டுவேலன், அரநெல்லி, மைலடிமரம், பொருசி, நாவல்மரம், துருஞ்சி, காட்டு மாங்காய், அரளிமரம், விளாமரம், ஆலமரம், கொண்ணை (கொன்றை), புழுமரம், முண்டிமரம், உதயமரம், ஜாலேரி, குமளான், தாண்டி, குரா, சிறு கொளுஞ்சி, புளியமரம், ஐம்புலச்சான், ஈச்சன், கூந்தன், கோயில் காசா, காசா, வகனை, வங்கார் போன்ற பல வகையான மரங்கள் இங்குக் காணப்படுகின்றன. இம்மரங்கள் வீடுகள் கட்டவும், விவசாயத்திற்கு உரமாகவும், தொழில் கருவிகள் செய்வதற்கும், புழங்குப் பொருட்கள் செய்வதற்கு என பல்வேறு நிலைகளில் பயன்தரக் கூடியனவாக இருந்து வருகின்றது. மேலும் நீர்மத்தி, மத்தி போன்ற மரங்கள் நீர் நிலைகள் சார்ந்த இடங்களில் நுனிப்பகுதி வானத்தைத் தொட்டார் போன்றும், அடிப்பகுதி யானையின் உருவங்களைப் போன்றும் பிரமிக்கதக்கவையாக இருக்கின்றன.

இம்மலைப் பகுதியில்,

- உயர்ந்த மரங்கள் - 15
- பல சாதி மரங்கள் - 40%
- விவசாயப் பயன் தரும் மரங்கள் - 25%
- 15% பாறைகளும், பெரிய கற்களும் காணப்படுகின்றன.

சிலர் தங்களின் விவசாய நிலங்களில் உயர் ரக மரங்களை (தேக்கு, கடுகாய், பலா, புளியம்மரம்) வளர்த்து வருகின்றனர். ஆனால், சவ்வாது மலைக்குப் பெயர் போன அதன் பெயரிலேயே அமைந்துள்ள ‘சந்தன மரம்’ மட்டும் பல ஆண்டுகளுக்கு முன்பே கருவருக்கப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் ‘சந்தனம் மரம்’ பற்றிய சரியான விழிப்புணர்வு இம்மக்களிடையே இல்லாமையே ஆகும். மேலும் ‘மதுரமரம்’, ‘கூடு மதுரமரம்’, ‘உதிரமரம்’, ‘ஆள் மிரட்டி’, ‘படை மிரட்டி’ முதலிய மூலிகை மரங்களும் இம்மலைப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. ‘ஆதண்டை’, ‘வெள்ளெருக்கு’, ‘சிந்துழிஞ்சி’ போன்ற மூலிகைச் செடிகளும் கொடிகளும் உள்ளன. இதனைக் கொண்டு இவர்கள் ஆதிகாலம் முதற்கொண்டே நோய்களைச் சரிசெய்து வருகின்றனர்.

‘காசா’ என்கிற மரத்திலிருந்து கிடைக்கும் நார்ப் பொருள் மிக கடினமாகவும், நீண்ட நாட்கள் உழைக்கக் கூடியதாகவும் இருக்கிறது. இதிலிருந்து எடுக்கப்படும் நாரினைக் கொண்டு கயிற்றினைத் திரித்து ஆடு, மாடுகள், எருமை போன்றவற்றைக் கட்டுவதற்கும், புணை பூட்டுவதற்கும் பயன்படுத்துகின்றனர். தும்புகொடி, தரைக்கொடி போன்றவற்றைக் கொண்டு வீடுகள் கட்டவும், வளம்பரிக் கொடி, கருங்கொடிகள் கூடை மூடுவதற்கும், மால் கட்டுவதற்கும் பயன்படுத்துகின்னர். இவைபோன்ற மேலும் பல செடி கொடிகள் மலையாளிகளுக்குப் பயனுள்ள வகையில் இருந்து வருகின்றன.

### 2.3.8. மூங்கில் வகைகள்

- பெருவாரை மூங்கில் - கடினத் தன்மை வாய்ந்தது. நீண்டு உழைக்கக் கூடியது. ஏணி அமைக்கவும் வீடு கட்டவும் பயன்படுகிறது.
- சிறுவாரை மூங்கில் - கூடை முடையவும், வீட்டு உபயோகப் பொருட்கள் செய்யவும், விளையாட்டுப் பொருட்கள் செய்யவும் பயன்படுகிறது.
- ஈத்தை - குடிசைகள் கட்டவும், கூடை முடையவும், கூரை வேயவும், படல் பின்னுவதற்கும் பயன்படுகிறது.
- நாணல் - இது மூங்கிலின் ஒரு பிரிவு, இது பொதுவாக ஆற்றங்கரைகளிலும், ஏரிக் கரைகளிலும் அதிகமாகக் காணப்படும். இதனைக் கொண்டும் கூரைவேய்கின்றனர்.

இந்த வகையான மூங்கில்களிலிருந்து செய்யப்படும் பொருட்கள் எடுப்பதற்கு மிக எளிமையாகவும், கோடைக் காலங்களில் குளிர்ச்சி தரக்கூடியதாகவும், காற்று மழையைத் தாங்கக் கூடியதாகவும் இருந்து வருகிறது.

### 2.3.9. விலங்குகள்

மலையில் வாழும் விலங்குகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் என்பனவாகும்.

#### 2.3.9.1. வீட்டு விலங்குகள்

வீட்டின் செல்லப் பிராணிகளான நாய், பூனை, பன்றி, நாட்டுமாடு, எருமை, வெள்ளை ஆடு, செம்மறி ஆடு போன்றவைகள் வீட்டு விலங்குகளாக இருக்கின்றன.

#### 2.3.9.2. காட்டு விலங்குகள்

குரங்கு, காட்டுமாடு, குரைக்கும்மான், தேனுண்ணும் மரக்கரடி, புலி, சிறுத்தை, காட்டுப்பூனை, கொரை ஆடு, கீரிப்பிள்ளை, கடமான், காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, குள்ளநரி, வேட்டைக்காரன், மூஞ்சுறு, புதர்நாய், பறக்கும் மரஅணில், தேவாங்கு, காட்டெருமை, யானை போன்ற விலங்கினங்களும், காட்டுக் கோழி, காட்டுச் சேவல், செம்புத்தான், மயில், மைனா, கொண்டைக் குருவி, வவ்வால், காகம், கிளி, இரட்டை வால் குருவி, சிட்டுக் குருவி, காடை, கௌதாரி போன்ற சில அற்புதமான பறவை இனங்களும் இங்கு வாழ்ந்து வருகின்றன.

மலைப்பாம்பு, பச்சைப்பாம்பு, சாரைப்பாம்பு, கத்தரிப்பாம்பு, கண்ணாடிவிரியன், நல்லப்பாம்பு, கொந்தாரி மூக்குப்பாம்பு, தண்ணிப்பாம்பு, கட்டுவிரியன், பறக்கும்பல்லி, உடும்பு, பச்சை ஓணான், வர ஓணான், அரணை, அட்டை போன்ற ஊரும் விலங்கினங்களும் இம்மலைப் பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இம்மலை மக்கள் தினந்தோறும் இந்த மிருகங்களோடு போராடுகிறார்கள். இந்தப் போராட்ட நிகழ்ச்சிக்காகக் தினந்தோறும் காத்திருக்கிறார்கள். போராட்டத்தில் மகிழ்ச்சியடைகிறார்கள். இத்தகைய வாழ்க்கை முறை இவர்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டது.

### 2.3.10. சவ்வாது மலையின் சிறப்புகள்

சவ்வாதுமலையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பண்டைக்காலம் முதற்கொண்டே தொல்குடிமக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதற்கு அங்குக் கிடைக்கும் கல்வெட்டுக்களும், நடுகல் வழிபாடுகளும் சான்றுகளாகும். மேலும், புதிய கற்கால மற்றும் இரும்புக்கால தொல்லியல் இடங்களும் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டும் வருகின்றன.

#### 2.3.10.1. **கல்வெட்டுக்கள், தொல்லியல் தடயங்கள்**

புதூர் நாட்டில் இருந்து தெற்கே எட்டுக் கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 'மேல்பட்டு' என்னும் கிராமத்திற்கு மேற்கில் பழமையான நடுகல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "அந்த நடுகல்லில் பொறிக்கப்பட்டுள்ள செய்திகள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என அறியப்படுகிறது. இந்த நடுகல் மாட்டு மந்தையைக் கவர்ந்த போது ஏற்பட்ட பூசலில் பலியான ஒரு வீரனைப் பற்றியது"[13] என்கின்றனர் தொல்லியளாலர்கள். செங்கம் கணவாய்க்குக் கிழக்கே 15 கி.மீ. தொலைவில் 'தென்மலை மேல்பட்டு' என்னும் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்திற்கு மேற்குப் பகுதியில் சிதைந்த நிலையில் வட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சிறுபாறை ஒன்றும் உள்ளது. மேலும்,

இம்மலைக் கிராமங்களான கோம்பை, கீளானூர், கீழூர், மேலூர். வலசை, கோவிலூர், மேல்பட்டுப் போன்ற பல இடங்களில் வீரர்கள் வில் அம்பு ஏந்தியவாறும் அவர்களின் உருவம் பொறிக்கப்பட்ட கற்சிலைகளும், கல்வெட்டுக்களும், ஆங்காங்கே சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இதனை இவ்வின மக்கள் வேடியப்பன், வேந்தியப்பன், மோழியப்பன், வேடன் என்று பல்வேறு பெயர்களில் தங்களுடைய முன்னோர் தெய்வங்களாக வழிப்பட்டு வருகின்றனர்.

### 2.3.10.2. புதிய கற்காலக் கருவிகள்

சவ்வாதுமலையின் பகுதியான கீழானூர், கோவிலூர், தாலூர், கோம்பை, நெல்லிவாசல், சேம்பறை, கல்லாவூர், பேளுர், பெரும்பட்டம், அத்திப்பட்டு போன்ற மலைக் கிராமங்களில் வாழும் மக்கள் இவ்வூர் கோவில்களில் 75 க்கும் மேற்பட்ட புதிய கற்காலக் கற்கருவிகளை வைத்து வழிப்பட்டு வருகின்றனர். இந்தக் கருவிகளை இம்மக்கள் ‘சாமிகள்’ என்று அழைக்கின்றனர். இந்தக் கருவிகள் 5 செ.மீ. நீளம் முதல் 25 செ.மீ. நீளம் வரைக் காணப்படுகிறது. கீழானூர் என்னும் ஊருக்கு மேற்கே சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் ‘கூலி எருது பாறை’ என்ற இடத்தில் புதிய கற்காலத்தில் கருவிகளைத் தீட்டப் பயன்படுத்தப்பட்ட 21 குழிகள் காணப்படுகின்றன. இந்த இடத்தை இவ்வூர் மக்கள் பண்டைய காலத்தில் மாடு தண்ணீர் குடிக்கும் போது ஏற்பட்ட குழிகள் என்று கூறுகின்றனர். “இந்தக் குழிகள் பளப்பளப்பான கருவிகளைப் பயன்படுத்தும் போது அதன் முனைத் தேய்ந்த பின் அதனை மீண்டும் வெட்டுவதற்கு அல்லது உழுவதற்குத் தகுந்தாற் போல் முனையைப் பதம் செய்ய தீட்டப்பட்ட இடம்”[14] என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த இடம் தமிழ் நாட்டில் முதன் முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இரும்புக் கால ஈமச்சின்னங்களான கற்பதுக்கை, கல்திட்டை, கற்குகைகள் போன்றவைகளும் 50க்கும் மேற்பட்டவைக் காணப்படுகின்றன. இதனை மலையாளிகள் பாண்டியன் வீடு, பாண்டியன் திட்டு, பாண்டவர் வீடு என்றே அழைக்கின்றனர்.

### 2.3.10.3. குள்ளர் குகைகள்

ஜமுனாமரத்தூரில் இருந்து 15 கி.மீ. தொலைவில் மேல் செப்பிலி, கீழ் செப்பிலி என்ற ஊர்கள் உள்ளன. அவற்றை கடந்தவுடன் அடர்ந்த காடுகளினூடே செல்லும் ஒற்றையடிப் பாதையில் 10 கி.மீ. தொலைவு சென்றால் ‘வாலிப்பாறை’ என்ற இடம் உள்ளது. இந்தப் பாறையின் மீதும், ஜமுனாமரத்தூரிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ‘தென்மலை மேல்பட்டு’ என்ற கிராமத்திற்கு வடக்கே 2 கி.மீ. தூரத்தில் பண்டைய காலத்தில் வாழ்ந்த குள்ள மனிதர்களின் ‘கல் வீடுகள்’ காணப்படுகின்றன. இந்த

வீடுகள் பெரிய பாறையின் மீது ஆயுதங்களே இல்லாத காலத்தில் உருவாக்கப்பட்டவைகள் ஆகும். சதுரமாகப் பாறைகளை வெட்டி நான்கு புறமும் சுவர் எழுப்பி அதன் மீது இன்னொரு சதுரப் பாறையை வைத்தால் வீடு. இதன் உள்ளே சென்று வர வட்ட வடிவில் ஒரு துளை உள்ளது. இவை சரித்திர அதிசயங்களில் ஒன்றான குகைகளாகும். இந்தக் குகைகள் கற்காலத்தில் வாழ்ந்த குள்ளர்கள் வசித்த இடங்கள் எனக் கூறப்படுகிறது. பாறையின் கணப்பரிமாணங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு கற்களாக அடுக்கப்பட்டு அழகாக உருவாக்கப்பட்ட இந்தக் குகைகள் பல நூற்றாண்டுகளாகச் சரியாமல் அப்படியே இருந்துள்ளன. ஆனால், இன்று ஏராளமான கல் வீடுகள் சிதைந்து எந்தக் கவனிப்பும் கேட்பாரற்றும் கிடக்கின்றன. இந்த கல்வீடுகளை அங்கு வாழும் மக்கள் பாண்டவர்கள் வனவாசத்தின்போது கட்டப்பட்ட வீடுகள் என்று கூறுகின்றனர்.

குகைகளைச் சுற்றி பசுமையாகப் படர்ந்துள்ள கொடி வகைகள் 'அழுங்கன்னி' என்றழைக்கப்படுகிறது. இந்தக் கொடிகளின் சாற்றை எடுத்து ஆண் அல்லது பெண்ணின் உடலில் தடவிவிட்டால் உடனே அவர்கள் காதல் வயப்பட்டு விடுவார்கள் என்பது மலையாளிகளின் ஐதீகமாகும்.

2.3.10.4. **யானைக் கட்டிக்கல்**

தென்மலை நாட்டிற்கு உட்பட்ட 'அத்திப்பட்டு' என்னும் கிராமத்திற்கு மேற்கில் செங்குத்தாக 10 முதல் 15 அடி உயரமும் 50 செ.மீ. வரை அகலமும் கொண்டதாக மூன்று கற்கள் வரிசையாகக் காணப்படுகிறன. இந்தக் கல் செதுக்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். இதனை மலையாளிகள் சங்ககாலத்தில் யானையைக் கட்ட பயன்படுத்தி வந்தனர் என்றும் இதன் காரணமாக இந்தக் கல்லுக்கு யானைக் கட்டிக்கல் எனப் பெயர் வந்தது என்றும் கூறுகின்றனர். வரலாற்று ஆய்வாளர்கள் 'ஈமப் பொருட்கள் புதைக்கப்பட்ட இடத்தின் மீது ஒரு பெரிய கல் செங்குத்தாக நிறுத்தப்படுவது வழக்கம். இவ்வமைப்புக் கொண்ட கற்களைக் 'குத்துக்கல்' 'நெடுநிலை நடுக்கல்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

2.3.10.5. **நீர்மத்தி மரமும் கண்ணாடி மாளிகையும்**

செங்கம் கணவாய்க்குக் கிழக்கே 'தென்மலை மேல்பட்டு' என்னும் கிராமம் அமைந்துள்ளது. இவ்வூருக்குக் கிழக்கே மிகப்பழமையான 1000 வருடங்கள் வாழ்ந்த நீர்மத்தி மரம் காண்பவர்களைப் பிரமிக்கச் செய்யும் வகையில் அமைந்துள்ளது. இந்த மரத்தின் ஓங்கி உயர்ந்திருக்கும் கிளைகள் வானத்தைத் தொட்டார் போன்றும், அடிப்பகுதி யானையின் உருவத்தைப் போன்றும் காணப்படுகிறது. இதன் அடிப்பகுதி 30 மீட்டர் வரை

இருக்கும். இந்தமரம் ஆசியாவிலேயே மிகப் பெரியமரமாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இவ்விடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கே சென்றால் ஆங்கிலேயர் காலத்தில் வெறும் 1800 ரூபாய் செலவில் '1896' ஆம் வருடம் கட்டப்பட்ட கண்ணாடி மாளிகை இருக்கிறது. இந்த மாளிகையில் இரண்டு விஸ்தாரமான அறைகளும், காற்றோட்டமான நீண்ட தாழ்வாரங்களும் காணப்படுகின்றன. ஊருக்கு மேற்கே இரண்டு கி.மீ. தொலைவில் தமிழகப் பகுதிகளை இணைக்கும் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இங்கிருக்கும் இணைப்புக்கள் செயல்படாமல் போனால் தமிழகப் பகுதியில் இருக்கும் அனைத்தும் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விடும்.

### 2.3.10.6. பீமன் நீர்வீழ்ச்சி

மலையின் மையப்பகுதியான ஜமுனாமரத்துரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் பீமன் நீர்வீழ்ச்சி உள்ளது. இதில் வருடத்திற்கு எட்டு மாதம் நீர்வரத்து இருக்கும். இங்குப் பாண்டவர்கள் வனவாசத்தின் போது வந்து தங்கியதாகக் கூறப்படுகிறது. அங்குள்ள ஒரு பாறையில் ஆழ்ந்த பள்ளம் ஒன்று இருக்கின்றது. இதனை பீமன் முட்டிப்போட்டு நீர் குடிக்கும் போது ஏற்பட்ட 'பள்ளம்' என்று இவர்கள் கூறுகின்றனர். இதன் காரணமாகத்தான் இந்த நீர் வீழ்ச்சிக்கு 'பீமன் நீர்வீழ்ச்சி' என்ற பெயர் வந்ததாகத் தகவலாளி சிவசேமண் (ஊ.ம.த.) கூறுகின்றார்.

இந்தப் பாறைகளின் மேலிருந்து பார்க்கும் போது கீழே இறங்குவது என்பது சுலபமானதாகத் தோன்றினாலும் அவ்வாறு இறங்குவது என்பது சுலபமானது இல்லை. இங்கிருக்கும் ஒரு பாறையிலிருந்து சாம்பிராணியின் நறுமணம் தொடர்ந்து வந்துக்கொண்டே இருப்பது இயற்கையின் கைவண்ணம். நீர்வீழ்ச்சியைச் சுற்றிலும் இருக்கும் அற்புதமான இயற்கை எழில் மிகுந்த இடம் காதலர்களுக்கும், திருமணமானவர்களுக்கும் ஏற்ற அற்புதமான சுற்றுலா இடமாகும்.

### 2.3.10.7. இயற்பியல் மையம்

காவலூர் என்ற இடத்தில் ஆசியாவின் மிகப்பெரிய தொலை நோக்கியான **'வைனபாபு'** வானாய்வகம் அமைந்துள்ளது. இங்கு வானியல் தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இம்மையம் இந்திய வானியற்பியல் மையத்தால் (Indian Institute of Astro physics) நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்த மையத்திலிருந்து வானைக் காண பொதுமக்களுக்கு அனுமதி (பிரதி சனிக்கிழமை தோறும்) அளிக்கப்படுகிறது.

### 2.3.11. சுற்றுலாத்தளம்

மலையின் மையப் பகுதியான ஜமுனாமரத்தூரில் இருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள **'அமிர்தி வனவிலங்கு பூங்கா'** சிறுவர்களுக்கு ஏற்ற சுற்றுலாத்தளமாகத் திகழ்கிறது. சவ்வாது மலையின் ஒரு பகுதியான ஏலகிரிமலையும் வேலூர் மாவட்டதில் உள்ள சிறந்த சுற்றுலாத் தளமாக விளங்கி வருகின்றது. இங்கு ஏரியில் படகு சவாரி, 'பாரா கிளைடிங்' என மனதைக் கவரும் பொழுது போக்கு அம்சங்கள் பல உள்ளன. மேலும் மலையின் மேல் அமைந்துள்ள பீமன் நீர்வீழ்ச்சியும், மலையின் வடக்குப் பகுதியில் அமிர்தி நீர்வீழ்ச்சியும், கிழக்குப் பகுதியில் பால் அருவி மற்றும் நாமக்கல் நீர்வீழ்ச்சியும் சுற்றுலா மையங்களாக விளங்கி வருகின்றன.

ஜமுனாமரத்தூரில் உள்ள கோலப்பன் ஏரியில் படகுச் சவாரியும், அதனையொட்டி அமைந்துள்ள சிறுவர் பூங்காவும் சுற்றுலா மையங்களாகும். இங்கு இயற்கைத் தாவரமும், விலங்குகளும் மனதைக் கவரும் வகையில் காணப்படுகிறது. மலையில் விளையக் கூடிய சாமை, தினைப் போன்றவைகளை வரும் சுற்றுலாப் பயணிகள் வியந்து வாங்கிச் செல்கின்றனர்.

### 2.3.12. போக்குவரத்து

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு மலைப் பகுதியில் உள்ள ஊர்களை இணைப்பதற்கு நல்ல பாதை வசதிகளே இல்லை. கரடு முரடான பாதைகளில் இர்களின் பயணம் துன்பத்துடன் நீண்டுகொண்டே இருந்தது. இப்போது மலைப்பகுதியில் பேருந்துகள் இயக்க புதிய தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன. மலை அடிவாரத்திலிருந்து மலைக் கிராமங்களுக்குச் செல்ல நான்கு வழித்தடங்கள் இருக்கின்றன. இவற்றில் மூன்றில் மட்டுமே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. முன்பு மலையின் மேற்குப் பகுதியான வேலூர் மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து 'மட்ரப்பள்ளி' வழியாக புதூர் என்கிற கிராமத்திற்கும், ஆலாங்காயம் வழியாக ஜமுனாமரத்தூருக்கும் மட்டுமே பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. அதே போல் மலையின் கிழக்குப் பகுதியிலிருக்கும் கிராமங்களின் வசதிக்காகத் திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் இருந்து பட்டரைக்காடு வழியாக ஜமுனாமரத்தூர் வரையிலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன.

ஜமுனாமரத்தூரிலிருந்து தெற்காக 15 கி.மீ. தொலைவில் உள்ள 'கீழ்விழாமுச்சி' வரை தனியார் பேருந்துகள் ஜீவா மற்றும் சரவணன் இயக்கப்படு வருகின்றன. வடக்குப் பகுதியான 30 கி.மீ. தொலைவில் இருக்கும் அமிர்தி வரை ரேணுக்கம்பாள் பேருந்தும் இயக்கப்பட்டு வந்தது. இப்பகுதிகளைச் சுற்றி அமைந்திருந்த பல கிராமங்களுக்குச்

சரியான சாலை வசதிகள் இல்லாததால் அங்கிருந்த மக்கள் கரடுமுரடான காட்டு வழிப் பாதைகளிலேயே தங்களுடைய பயணங்களை அமைத்துக் கொண்டனர்.

மலையின் தென்பகுதியான செங்கம் வட்டம் ‘பரமனந்தல்’ வழியாக மேல்பட்டு, புலியூர் போன்ற கிராமங்களுக்குத் தார்ச்சாலைகள் அமைத்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எனினும் இப்பகுதிகளுக்கு இன்னும் பேருந்துகள் இயக்கப்படாதது மிகுந்த வருத்தத்திற்குரிய செய்தியாகும். மேற்குமலைப் பகுதியில் அமைந்துள்ள மலைக் கிராமங்களுக்கு இரண்டாண்டுகளாகச் சாலைகள் அமைத்துப் புதூரிலிருந்து கோம்பை, நெல்லிவாசல், கம்புகுடி, மற்றும் நடுகுப்பம் போன்ற கிராமங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதற்கு முன்பு புதூர் வரை மட்டுமே பேருந்து வசதி இருந்தது குறிப்பிடத்தக்கது. இது தவிர தெற்கு மற்றும் கிழக்குப் பகுதியிலிருந்து பாதை வசதிகள் இன்னும் சரிவர இல்லை. அந்தப் பகுதி மக்கள் இன்னும் நடைப் பயணத்தைத்தான் மேற்கொண்டு வருகின்றார்கள். அதாவது கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் மலையடிப்பகுதி கிராமமாகிய குப்பணத்தம், கல்லாத்தூர் வழியாகக் கோம்பை, விளாங்குப்பம், தாலூர் போன்ற கிராமங்களுக்குச் செல்வது என்பது எளிது. ஆனால், இப்பகுதி மக்கள் செங்கம், சிங்காரப்பேட்டைச் செல்ல வேண்டுமென்றால் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் புதூர், மட்ரபள்ளி வழியாகச் செல்ல வேண்டும். இதற்கு மாற்று வழியாக நெல்லிவாசல் அருகிலிருக்கும் சிங்காரப்பேட்டை காட்டு வழிப்பாதையைச் சீரமைத்துக் கொடுத்தால் இவர்களுக்குப் பணமும், நேரமும் மிதமாகும். இந்தக் கோரிக்கை மலைவாழ் மக்களிடையே நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. இக்கோரிக்கை என்று செயல்படுத்தப்படும் எனக் காத்திருக்கின்றனர். இதேபோல் தெற்குப் பகுதியில் உள்ள மலைக் கிராமங்களுக்குப் பாதைகள் அமைத்து சில ஆண்டுகள் ஆகியும் பேருந்து இயக்கப்படாததால் இப்பகுதி மக்கள் நடைப் பயணமாகவே பரமணந்தல், செங்கம் சென்று வருகின்றனர். இதற்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே மலைக் கிராம மக்களின் கோரிக்கையாகும்.

### 2.3.13. மலையில் வாழும் பிற இனமக்கள்

சவ்வாது மலை மலையாளிகள் வாழும் குடியிருப்புக்கு ஒதுக்குப் புறமாக இருளர் சாதியைச் சார்ந்த இரண்டு, மூன்று குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களை மலையாளிகள் தீண்டத் தகாதவர்களாகவே கருதுகின்றனர். இருளர்களை ஊரைப் பெருக்குவதற்கும் (தூய்மை செய்வதற்கும்), வானம் விடுவதற்கும், வெடி வைப்பதற்கும் கூலி வேலை செய்வதற்கும் பயன்படுத்துகின்றனர். இதற்குக் கூலியாக அறுவடையின்

போது இவர்களுக்கு வேண்டிய உணவு தானியங்களை ஊரில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் கொடுத்து விடுகிறார்கள்.

இருளர்களை இவர்கள் 'காட்டுப் பூஜாலிகள்' என்று அழைக்கின்றனர். அவ்வாறு அழைக்க காரணம் இவர்கள் காட்டில் கிடைக்கும் எலிகளையும் பிடித்து உண்பதே ஆகும். மேலும், ஓடை, குட்டை, குளம் போன்றவற்றில் கிடைக்கும் ஆமை, நண்டு, மீன், பறவைகள், காட்டு விலங்குகள், உடும்பு போன்றவற்றைப் பிடித்தும் உணவாக உட்கொள்கின்றனர். காட்டில் கிடைக்கும் கிழங்குகளையும், பழங்களையும் எடுத்து வந்து, தீயில் வாட்டியும் சமைத்தும் உண்ணுகின்றர்.

இவர்களுக்கு என்று தனி நிலமோ அல்லது வீடோ கிடையாது. ஊர் உதவிக்காக மலையாளிகள் இருளர்களுக்கு ஊருக்கு ஒதுக்குப்புறமாக இடங்களைக் கொடுத்து தங்க வைத்துள்ளனர். இவர்களை அடுத்து 'தோட்டி' என்று அழைக்கப்படும் ஹரிஜன மக்கள் இங்கு மேளம் அடிப்பதற்காக வந்து போகின்றனர். இவர்களுக்கு என்று இங்கு வீடுகள் இல்லை. இவர்கள் ஊர்ச் சாவடியின் திண்ணையில் இரவைக் கழிப்பது வழக்கம்.

தோட்டிகளைப் போன்று 'குட்டிப்பிள்ளைகள்' என்னும் 'அம்பட்டன்' இன மக்கள் சவரத் தொழிலாளிகளாக அவ்வப்போது இங்கு வருகைப் புரிகின்றனர். இவர்கள் அனைவருக்கும் தொழிலுக்குப் பதிலாகப் பணம் அளிக்கப்படுவதில்லை. மாறாகத் தங்கள் நிலங்களில் விளையக்கூடிய சாமை, நெல், பலா, திணை, கேழ்வரகு, மக்காச்சோளம் போன்றவற்றில் ஏதாவது ஒன்று அளிக்கப்படுகிறது.

மேற்கூறியவர்களைத் தவிர ஊருக்குள் ஒரு சலவைத் தொழிலாளிக் குடும்பம் (இவர்கள் இங்குத் தொழில் ரீதியாகக் குடியிருக்கவில்லை) நாயுடு குடும்பம், முஸ்லீம் குடும்பமும் உள்ளன. நாயுடு குடும்பமே ஊரின் கடைகளையும், சிற்றுண்டி சாலையையும் வைத்திருக்கின்றனர். வட்டிக்குக் கடன் தருதல், நிலம் வாங்குதல், கடைகளை வைத்து வியாபாரம் செய்தல் போன்ற தொழில்களை முஸ்லீம் பாய்கள் செய்கின்றார்கள். இவர்களைக் கொண்டதே சவ்வாது மலைச் சமூகமாகும்.

### 2.3.14. பிற நிறுவனங்கள்

அரசாலும், பிற சமூக நிறுவனங்களின் துணையாலும் ஊருக்கு வெளியே பள்ளிக்கூடங்களும், தொழுநோய் மருந்தகமும், 'லேம்ப்' சொசைட்டி, என்ற நிறுவனமும் உள்ளன. இந்த நிறுவனங்களின் பணிகளை மலையாளியின மக்கள் அதிகமாக

விரும்புவதில்லை. ஏனென்றால் அவர்களின் பணியைக் குறித்து பல குறைப்பாடுகளைத் தெரிவித்தவாறு இருக்கின்றனர். இந்த நிறுவனங்கள் மலையாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை நிறைவாக வழங்காமல் கொள்ளையடித்துக் கொண்டும் இருக்கின்றன என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

### 2.3.15. **பயிறு வகைகள்**

சவ்வாது மலைப்பகுதிகள் சாய்வாகவும், கரடுமுரடான பகுதிகளையும் கொண்டு அமைந்திருப்பதால் எல்லாப் பயிர்களையும் செய்ய முடிவதில்லை. இங்குக் 'கொத்துக் காடுகளே' (வானம் பார்த்த பூமி) மிகுதியாக உள்ளன. அவற்றில் தினை, சாமை, கொத்து சாமை, கேழ்வரகு, பனிவரகு போன்றவற்றை அதிகமாகப் பயிர் செய்கின்றனர். 'சமவெளிக் காடுகள்' (நீர்ப்பாசனக் காடுகள்) குறைவாகவே உள்ளன. இவற்றில் மலைநெல், செந்நெல் போன்றவைகளைப் பயிரிடுகின்றனர். இங்கு மழைக்காலங்களில் மட்டுமே வேளாண்மை நடைபெருகிறது. அவ்வாறு பயிர்செய்தாலும் வனவிலங்குகள் அழித்தது போகவே இவர்களுக்கு கிடைக்கிறது. மற்றக் காலங்களில் காட்டுப் பொருட்களைச் சேகரித்தல் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

### **2.3.16. சாமை அரிசி**

தற்போது வெறும் உப்புமாவிற்காக மட்டுமே உபயோகப்படுத்தப்படும் சாமை அரிசி மலைவாழ் மக்களின் உணவில் ஒரு காலத்தில் முக்கிய பங்கு வகித்தது. குருணை அளவில் இருக்கும் இச்சாமை அரிசி கை இயந்திரத்தின் மூலம் உமியிலிருந்து பிரிக்கப்படுகிறது. இதையே மின் இயந்திரங்களின் மூலம் பிரித்தெடுப்பது அதிக பணச் செலவை ஏற்படுத்தும். இஃது ஊட்டச்சத்துத் தயாரிக்கப்படுவதற்காகப் பூனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது மழை காலத்தில் மட்டுமே பயிரிடப்படக்கூடிய புன்செய் நிலப் பயிராகும். இப்பயிருக்குச் செயற்கை உரங்களோ, பூச்சி மருந்துகளோ இடப்படுவது இல்லை. இஃது இயற்கை விவசாயமாகும்.

நல்ல தார்ச்சாலைகளும் வாகனங்களும் இருந்தாலும் இம்மலைக்குப் பொருட்களைக் கொண்டு செல்ல சிறு வியாபாரிகள் இன்றளவும் கழுதைகளையே பயன்படுத்துகின்றனர். கழுதைகள் மீது உப்பு மூட்டைகளை ஏற்றிச் சென்று பண்டமாற்றாகச் சாமை அரிசியை வாங்கி வருகிறார்கள். இங்குப் பண்டமாற்று முறைதான் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. மேலும் இங்கு விளையும் தேனுக்கு மத்திய அரசு தேசிய தரச்சான்றுதல் வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

## 2.2.0. தொகுப்புரை

மனிதர்கள் வாழ்கின்ற இருப்பிடங்களே அவர்களின் பண்பாட்டு வளர்ச்சிக்குக் களமாக அமைகின்றன. அந்த வகையில் சவ்வாதுமலை மலையாளிகளின் இருப்பிடச் சூழலை ஆராய்கையில் பின்வரும் முடிவுகள் கிடைக்கிறது.

- கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான சவ்வாதுமலை பண்டைய காலம் முதற்கொண்டே சிறப்புற்று இருந்துள்ளது. திருவண்ணாமலை, வேலூர் ஆகிய இரு மாவட்டங்களில் அமைந்துள்ள இம்மலை 262 ச.கி.மீ. பரப்பில் தனது எல்லையை பரப்பியுள்ளது.
- இங்கு ‘சவ்வாது’ என்கிற நறுமணப் பொருள் அதிகமாகக் கிடைப்பதால் இம்மலைக்கு ‘சவ்வாதுமலை’ என்று பெயர் வந்துள்ளது என்பதை சான்றுகளால் அறிய முடிகிறது.
- சவ்வாதுமலைக்குச் சங்க காலத்தில் ‘பல்குன்றக் கோட்டம்’, ‘நவிரமலை’ ‘திரு சூலகிரி’ என்று பல்வேறு பெயர்கள் இருந்துள்ளதை சான்றுகளால் அறியமுடிகிறது.
- சவ்வாதுமலை சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிக்கும் அதன் பின்னர்ப் பல்லவர்கள், விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள், முகமதியர் ஆட்சிக்கும் இறுதியாக ஆங்கிலேயர் ஆட்சிக்கும் உட்பட்டு இருந்துள்ளதை அறியமுடிகிறது.
- சவ்வாதுமலையின் தட்பவெப்ப நிலைகள் பல்வேறு வகையான தாவர இனங்களும், விலங்கினங்களும், பறவைகளும் வாழ்வதற்கு ஏற்ப அமைந்துள்ளது. மலையின் இயற்கை வளங்கள் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மகிழ்ச்சி தருவனவாக இருந்து வருகின்றது.
- மலையில் கிடைக்கும் பல்வேறு தொல்லியல் சான்றுகள் இம்மலைப்பகுதியில் ஆதிகாலம் முதற்கொண்டே தொல்குடியினர் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை சுட்டுகிறது.
- சவ்வாதுமலைப் பல்வேறு சிறப்புக்களை பெற்றிருப்பினும் சரியான போக்குவரத்து வசதியின்மைக் காரணமாக அத்தகைய சிறப்பக்களை வெளியுலகம் அறிந்துக்கொள்ள முடியாத நிலையையே நிலவி வருகிறது.
- மலையாளிகளின் குடியிருப்புக் அருகில் இருளர் சமூகத்தை சார்ந்த சில குடும்பங்கள் இவர்களின் உதவியாலர்களாக இருந்து வருகின்றனர். இவர்களைத் தவிர்த்து தோட்டி, குட்டிப்பிள்ளைகள், அம்பட்டன் சமூகத்தை சார்ந்த மக்களும் அவ்வப்போது மலைப்பகுதிகளுக்கு வந்து தங்களுடைய தொழிலை மேம்படுத்தி வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**அடிகுறிப்புக்கள்**

1. சே.சா., ஜான் கென்னடி, கோடைமலைப் பழங்குடியினர், ப.13.
2. வெற்றி தமிழ் அகராதி, ப.166.
3. கழகத் தமிழ் அகராதி, ப.173.
4. நா.கதிரைவேற்பிள்ள, தமிழ் மொழி அகராதி, ப.609.
5. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.609.
6. http://ta.wikipedia.org/s/jox
7. http://ta.wikipedia.org/s/jox
8. கேசவன், (ஊ.க.) கோம்பை கிராமம்.
9. சம்பந்தர், உலக மலைகள், ப.77.
10. பிலோ இருதயநாத், கட்டுரைகள், ப.48.
11. http://ta.wikipedia.org/s/jox Monday, September 8. 2011.
12. http://ta.wikipedia.org/s/jox Friday, may 14. 2005.
13. http://ta.wikipedia.org/s/jox Thusday, jun 24, 2014.
14. இராசுதுரை, ஆவணங்கள், ப.211.